பெண்மைக்குமெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி: 23628

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை: ரூ. 1-25

புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஆடர் செய்து
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

சுடர் 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஹூ பங்குனி மீ 25 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ஷஃபா பிறை 08 (08.04.1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 113

## நாவற்குழி முகாமுக்கு ஹெலி மூலமே தண்ணீர்

யாழ்ப்பாணம் ஏப். 8
நாவற்குழி இராணுவத்தினருக்கு ஹெலிக்கொப்டர் மூலமே குடிதண்ணீர் வழங்கப் பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

கோடைக்கால வரட்சியினால் நாவற்குழி இராணுவ முகாமில் இருக்கும் கிணற்று நீர் வற்றிப் போய் தண்ணீர் உவர்த்தன்மையாக மாறி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்தே ஹெலிக்கொப்டர் மூலம் முகாமுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது.

நேற்றும் ஹெலிக்கொப்டர் மூலம் முகாமுக்குத் தண்ணீர் கொண்டுவரப்பட்டது. அவ்வேளையில் போராளிகள் ஹெலி மீது தாக்குதல் மேற்கொண்டபோதும் ஹெலியில் இருந்து தாக்குதல் மேற்கொள்ளப் படவில்லையாம்.

ஹெலி மீதான தாக்குதல்கள் தொடருமானால் நாவற்குழி இராணுவத்தினர் குடிதண்ணீர் இல்லாமல் அவதியுறும் நிலை ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ - 10)

### சுபநேரம்

08-04-1987
புதன்கிழமை

சுபநேரம்:
4-37 முதல் 6 07வரை
ராகுகாலம்:
12-07 முதல் 1-37 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்



கடிதம் வரும் போகும், தூதுவர்மார் வருவினம் போவினம், உருப்படியா ஏதாவது நடக்குமா என்டதுதான் கேள்வி.

# ‘எங்களை விடுவிக்க அரசு முயலாவிடில் மேலும்பலர் புலிகளிடம் சிக்குவர்’

## யுத்தக் கைதிகள் தெரிவிப்பு

— அலுவலகச் செய்தியாளர்:- க. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

ஸ்ரீலங்கா அரசு அவர்களுக்காகப் போராடிய எங்களை விடுவிப்பதற்கு ஆக்கபூர்வமான முயற்சி எடுக்க வேண்டும். தவறின் எம்மைப்போல மேலும் பல சிப்பாய்களுக்கு இதே கதி ஏற்படும். புலிகளிடம் சிக்கும் சிப்பாய்களின் எண்ணிக்கைதான் அதிகரிக்கும்.

யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் காவலில் வைக்கப்பட்டிருக்கும் எட்டுப் படையினரும் இப்படி ஒரே குரலில் தெரிவித்தனர்.

நேற்று மாலை தம்மைச் சந்தித்த கொழும்பு, வெளிநாட்டுச் செய்தியாளர்களிடம் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

வெளிநாட்டுச் செய்தியாளர்களிடம் அவர்கள் மேலும் கூறியதாவது:-

எங்களை விடுவிப்பதற்கான முயற்சிகளைத் தாமதமின்றி மேற்கொள்ளும்படி அரசிடம் தெரிவியுங்கள்.

எம்மை விடுதலைப் புலிகள் பிடித்த சமயம் தொலைத் தொடர்புத் திணைக்களத்திலும் எழுநூறு படையினர் இருந்தனர்.

ஆனால் ஒருவர்கூட எம்மைக் காப்பாற்ற வரவில்லை. இதுவே எமக்கு வேதனையளிக்கிறது.

எம்மைப் புலிகள் நன்றாகவே பராமரித்து வருகிறார்கள்.

- இப்படி யுத்தக் கைதிகள் தெரிவித்தனர்.

"எங்களை விடுவிப்பதற்கு அரசு என்ன முயற்சிகளை எடுத்து வருகிறது?" என்று கைதிகளில் ஒருவர் கொழும்புப் பத்திரிகையாளர் ஒருவரிடம் கேட்டார்.

'நான் சில நாட்க

(4ஆம் பக்கம் பார்க்க)

### மரக்குற்றிகளுக்கு பெரும் மவுசு!

யாழ். மாவட்டத்தில் தென்னை, பனை மரக்குற்றிகளுக்குப் பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் படையினரின் விமானத் தாக்குதல்கள் அதிகரித்து வருவதன் காரணமாக ஒவ்வொரு வீடுகளிலும் பதுங்கு குழிகள் அமைக்கும் வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

பதுங்குகுழிகள் அமைப்பதற்காகவே பனை மரங்களும் தென்னை மரங்களும் தறிக்கப்பட்டு மரக்குற்றிகள் வீடுகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. (உ-10)

## நகரில் நேற்று ஹர்த்தால்

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ் நகரில் நேற்று பூரண கடையடைப்பும் ஹர்த்தாலும் மேற்கொள்ளப்பட்டன. உள்ளூர் வாகனப் போக்குவரத்துகள் ஸ்தம்பிதம் அடைந்தன. நகரம் முற்றாகச் செயலிழந்தது.

ஸ்ரீலங்கா சிப்பாய்கள் யாழ் கோட்டையில் இருந்து யாழ் ஆஸ்பத்திரி மீது மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்தும்-

நகரப் பகுதிகளில் உள்ள வர்த்தக ஸ்தாபனங்கள், வீடுகள் கோட்டை சிப்பாய்க

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரிக்கு மேல் வெடிக்கும் சன்னங்கள்

யாழ்ப்பாணம், ஏப், 8
கோட்டை முகாமில் இருந்து தற்போது அடிக்கடி மேற்கொள்ளப்படும் துப்பாக்கிப் பிரயோகங்களின்போது துப்பாக்கிச் சன்னங்கள் யாழ் ஆஸ்பத்திரிக்கு மேலாகவும் அடிக்கடி செல்கின்றன.

தினமும் கோட்டை முகாமில் இருந்து அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகமும் 'ஷெப்பர்' தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடற்கரைவீதி, சின்னக்கடைவீதி, பிரதான வீதி, கொட்டடி ஆகிய பகுதிகளை நோக்கி தினமும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன.

திடீரென ஆஸ்பத்திரிக்கு மேலாகவும் துப்பாக்கிச்சன்னங்கள் வந்து வெடிப்பதன் காரணமாக நோயாளர்கள், வைத்தியர்கள் பெரும் அச்சம் அடைந்துள்ளார்கள்.

## நகரில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப் 8
நேற்றிரவும் யாழ் கோட்டை முகாமிலிருந்து நகரை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்றிரவு 9.45 மணியளவில் இரண்டு ஷெல் குண்டுகள் அடுத்தடுத்து நகரில் பலத்த சத்தத்துடன் விழுந்து வெடித்தன.

ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (உ)

## ஆயுதங்களைப் போட்டாலேயே தீவிரவாதிகளுடன் பேச்சு

### ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, ஏப். 8
தீவிரவாதிகள் முதலில் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும். அதன் பின்னரே அரசாங்கம் அவர்களுடன் பேச்சுக்களை நடத்தும்

—இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா தெரிவித்ததாக ஏ. எவ் பி செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வுகாண நான் தயாராக இருக்கின்றேன். ஆனால் தீவிரவாதிகள் முதலில் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும். அதன் பின்னர்தான் அவர்களுடன் பேச்சுக்களை அரசாங்கம் நடத்தும்.

தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். அதே நேரத்தில் அவர்களுடன் ஒரே மேசையில் இருந்து நான் பேச்சுக்களை நடத்த முடியாது.

- இப்படி திரு. ஜெயவர்த்தனா சொன்னதாக ஏ. எவ் பி செய்தி ஸ்தாபனம் மேலும் தெரிவித்தது. (உ-எ)

### உளவு பார்த்ததாக ரஷ்யா மீது குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஏப் 8
ரஷ்யாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் ரஷ்யா உளவு பார்த்ததாக அமெரிக்க அரசு குற்றம் சாட்டியிருக்கிறது.

இது தொடர்பாக அமெரிக்க அரசின் ஆட்சேபனை நேற்று உத்தியோகபூர்வமாக ரஷ்யாவுக்கு அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதி றேகன் இந்த விடயம் சம்பந்தமாக நேற்று இரவு உத்தியோக பூர்வ அறிக்கை ஒன்றை விடுத்தார். (உ)

## 34 மாதங்களுக்கு மேல் காவலிலுள்ள 6பேரே உண்ணாவிரதப் போரில்

கொழும்பு, ஏப்ரல் 8
கடந்த திங்கள் முதல் வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதப் போரில் குதித்திருக்கும் ஆறு தமிழ் அரசியல் கைதிகளின் பெயர்கள் வருமாறு:

1. கந்தசாமி தவராசா-இவர் 12-9-1983 இல் கைதுசெய்யப்பட்டார். 41 மாதங்களாக தடுப்புக்காவலில் இருந்து வருகிறார்.

2. இராசதுரை ராஜ்குமார்- 20-2-1984 இல் இவர் கைதுசெய்யப்பட்டார்.

3. செல்வத்துரை ஸ்ரீதரன்-15-4-1984 இல் இவர் கைதுசெய்யப்பட்டார்.

4. சின்னத்தம்பி தர்மலிங்கம்-28-2-1984 இல் இவர் கைதுசெய்யப்பட்டார்.

5. கதிர்காமர் பாலசிங்கம்- 3-3-1984 இல் இவர் கைதானார்.

6. பீதாம்பரம் நாகநாதன்- 3-3-1984 இல் இவர் கைதுசெய்யப்பட்டார்.

இவர்கள் அனைவரும் நீதி அமைச்சு நியமித்த ஆலோசனைச் சபையின் முன் ஆஜராக்கப்பட்டபோது, விடுவிக்கப்படுவர் என்று கூறப்பட்டது. ஆனால் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிக்க வேண்டி சென்ற 25 ஆம் திகதி அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப் பட்டது. பின்னர் சுழற்சி முறையில் பத்து நாட்கள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

இவற்றுக்கு அரசிடம் இருந்து சாதகமான

(4ஆம் பக்கம் பார்க்க)

# சட்டம், ஜனநாயகம் பற்றிப் பேச அரசுக்கு அருகதை கிடையாது

## உண்ணாவிரதக் கைதிகள் ஜனாதிபதிக்கு மகஜர்

கொழும்பு, ஏப் 8
சட்டத்தையும், ஜனநாயகத்தையும் பற்றிப் பேச அரசுக்கு அருகதை இல்லை.

உலக நாடுகளினால் கண்டிக்கப்பட்ட இலங்கையின் பயங்கரவாதத் தடைச்சட்டம். இந்த மனித உரிமை மீறல் சட்டத்தின் வரையறைகளையே மீறிய விதத்தில் பதினெட்டு மாதங்களுக்கு மேலாக பலர் நீண்டகாலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் பேசும் அரசியல் கைதிகள் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் குறிப்பிட்டவாறு தெரிவித்துள்ளனர்.

1985 முதல் 18 மாதங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப் பட்டிருப்போரை விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விட்டிருந்தோம்.

இதுவரை இப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

ஐ. நா மனித உரிமை சாசனத்தில் கைச்சாத்திட்ட நாடுகளில் ஸ்ரீ லங்காவும் ஒன்று.

உங்கள் அரசின் கீழ் நடைபெற்று வரும் அநாகரிகமான மனித உரிமை மீறல் பற்றி - அதிகரித்து வரும் உலக அபிப்பிராயத்தைத் தணிப்பதற்காகவே அடிக்கடி அரசியல் கைதிகளை விடுவிப்பது பற்றி உரத்த குரலில் பேசப்பட்டு வருகின்றது.

நடைமுறையில் அவை எவ்வளவு தூரம் அமுலாக்கஞ் செய்யப்பட்டுள்ளது என்பதைப் பார்த்தாலே தெரியும்.

சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள நாம் முகம் கொடுக்கும் பாரதூரமான பிரச்சினை இது மாத்திரமல்ல.

'சித்திரவதைகள் இடம் பெறவில்லை; கைது செய்யப்பட்டவர்கள் காணாமற் போகவில்லை' - என்று வாய் கூசாமல் பொய் கூறும் உங்கள் அரசினால் மூடி மறைக்க முடியாத ஒரு பிரச்சினை என்பதால் நாம் நீண்டகாலமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களின் பிரச்சினையை முன் வைத்துள்ளோம்.

நீங்களே ஆக்கிய மனித உரிமை மீறல் சட்டமான பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கும் கூட உங்கள் அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் கட்டுப்படவில்லை; அச் சட்டத்தின் கொடூரத் தன்மை உங்கள் கொடுமைகளுக்கு போதவில்லை. இதனால் உங்கள் அரசு சட்டத்தையும் ஜனநாயகத்தையும் பற்றிப் பேச அருகதையற்றதாகி விட்டது.

இதனால் நாம் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். (உ-எ)

## ஜனாதிபதி கடிதத்துடன் பேர்னாட் புதுடில்லி சென்றார்

கொழும்பு, ஏப். 8
இந்தியப் பிரதமரின் செய்திக்கான பதில் கடிதத்துடன் இலங்கைத் தூதர் பேர்னாட் திலகரத்தின நேற்று புதுடில்லி சென்றார்.

பிரதமர் காந்தியின் செய்தியை ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஆக்கபூர்வமான முறையில் அணுகியிருக்கிறார் — இப்படி திரு பேர்னாட் திலகரத்தின, கொழும்பில் இருந்து புறப்படும் முன்னர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

ஆனால் ஜனாதிபதிஜெயவர்த்தனாவின் பதில் கடிதத்தில் என்ன அடங்கியிருக்கின்றது என்பதை தெரிவிக்க திரு பேர்னாட் திலகரத்தின மறுத்துவிட்டார்.

திரு திலகரத்தின நேற்று மாலை புதுடில்லி போய்ச் சேர்ந்தார் என்றும், இன்று புதன்கிழமை இந்திய அதிகாரிகளைச் சந்திப்பார் என்றும் புதுடில்லியில் இருந்து பிந்திவந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை புதுடில்லியில் தமிழக அரசு அதிகாரிகளுடனும் திரு. திலகரத்தின பேச்சுக்களை நடத்துவார் என அறிவிக்கப்பட்டது. (அ-உ-எ)

## செஞ்சிலுவைக் குழு இங்கு வர உதவுங்கள்

### எதிர்க்கட்சிகளிடம் நீலன்

கொழும்பு, ஏப்ரல் 8
சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கக் குழு ஒன்று இலங்கைக்கு வர உதவி செய்யும்படி தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வம் எதிர்க்கட்சிகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு ஒன்று இலங்கை வர விருப்பம் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுவதைத் தொடர்ந்து [illegible] திருச்செல்வம் இந்தக் கடிதத்தை சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பீட்டர் கெனமன், ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் திரு. விஜய குமாரணதுங்க ஆகியோருக்கு அனுப்பி வைத்திருக்கிறார். (உ-எ)

### கிழக்கில் மீண்டும் தேடுதல்

மட்டக்களப்பு, ஏப்ரல் 8
மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாகஓய்ந்திருந்த ஆயுதப் படையினரின் சுற்றி வளைப்புத் தேடுதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் இருதயபுரம், வாழைச்சேனை, புன்னைச்சோலை, வந்தாறுமூலை உட்பட சில இடங்களில் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-21)

★ ஒருதலைப்பட்சமாக

# 10 நாள் யுத்தநிறுத்தம் புத்தாண்டை ஒட்டி

## அரசிடம் 'தொண்டா' கோரிக்கை

கொழும்பு, ஏப். 8
புத்தாண்டை ஒட்டி பத்து தினங்களுக்கு இராணுவ நடவடிக்கைகளை ஒருதலைப்பட்சமாக நிறுத்தி வைக்கும்படி இலங்கை அரசுக்கு அமைச்சர் தொண்டமான் பகிரங்க வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

கொழும்பில் இந்தியாவின் உதவித் தூதராகப் பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் திரு. கே. ஆர். சிங்காவுக்கு கடந்த திங்கள் கிழமை பிரியாவிடை வழங்கும் வைபவம் ஹோட்டல் ஹொலிடே இன்னில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அமைச்சர் தொண்டமான் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

ஒருதலைப்பட்சமாக இராணுவ நடவடிக்கைகளை இலங்கை அரசு இடைநிறுத்தி வைக்க வேண்டும்.

இதனால் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண வேண்டும் என்ற உண்மையான விருப்பத்தை, அக்கறையை உலக நாடுகளுக்கு இலங்கை அரசு எடுத்துக் காட்ட முடியும்.

இக்காலத்தில் இராணுவ நடவடிக்கைகளை எடுக்கவேண்டாம் என்று போராளிகளை இந்தியா

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பயங்கரவாதத் தடைச்

## மாநகர சபை ஊழியர் உட்பட மூவர் பலி

மட்டக்களப்பு, ஏப். 8
மட்டக்களப்பு புன்னைச்சோலையில் ஆயுத படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் மாநகர சபை ஊழியர் உட்பட மூவர் கொல்லப்பட்டனர்.

படையினரைக் கண்டு ஓடிய சமயம் இவர்கள் கொல்லப்பட்டனர். சடலங்களைப் படையினர் எடுத்துச்சென்றனர். (இ-21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னைய சிறு விளம்பரங்கள்

விற்பனைக்கு

(புதுமுகவிலர்க்) இறைச் சிக்கான கோழிகள் விற்பனைக்கு உண்டு. இலோ: ரூபா 40/-, மைக்ரே. கே. கே. எஸ் வீதி குளப்பிட்டி சந்தி, கொக்குவில். (8894)


# முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர் ஓய்வூதிய தாமதம் நீங்கும்

முள்ளியவளை, ஏப்ரல் 8

முல்லைத்தீவு மாவட்ட இளைப்பாறிய ஆசிரியர்களின் ஓய்வூதியம் விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இவர்கள் இதுவரை ஓய்வூதியம் பெறுவதற்குத் தேவையான ஆவணங்களை கொடுத்தும் பல வருடங்களாக ஓய்வூதியம் பெறமுடியாத நிலையில் இருந்தனர்.

கடந்த வாரம் இவர்களின் கோவைகளைப் பரிசீலனை செய்த கல்விப் பணிப்பாளர் ஓய்வூதியம் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்காதவர்களுக்கு ஓய்வூதியம் பெறுவதில் காலதாமதம் ஏற்படும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார். (இ-93)

## நியமனமும் பதவி உயர்வும்

கல்முனை, ஏப்ரல் 8

ஏறாவூர் பொது சௌக்கிய பரிசோதகராக கடமை புரிந்த திரு. ஆர். அரசலிங்கம் உடுவில் பொதுச் சௌக்கிய பரிசோதகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உடுவில் பொது சௌக்கிய பரிசோதகராக இருந்த திரு. கே. தங்கவேலாயுதம் யாழ். மாவட்ட பொது சௌக்கிய மேற்பார்வையாளராக பதவி உயர்வுபெற்றுள்ளார். (இ-27)

## புத்தூரில் திருட்டு

அச்சுவேலி, ஏப்ரல் 8

புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி ஆசிரியர் ஒருவரின் வீட்டில் இருந்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன.

ஆசிரியர் குடும்பத்தினர் வீட்டில் இல்லாத சமயம் இந்த திருட்டு இடம்பெற்றது. (இ-11)

## பல்கலைக்கழக ஆசிரியர்கள்

# ஆஸ்பத்திரி மீதான தாக்குதலுக்குக் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ். பல்கலைக் கழக போதனாபீடமாக அமைந்துள்ள யாழ் பெரியாஸ்பத்திரி மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

- இவ்வாறு யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ் வைத்தியசாலை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் அதன் விளைவாக ஏற்பட்ட பல மரணங்களும் வடக்கில் உள்ள அப்பாவிக் குடிமக்களின் வதிப்பிடங்கள் மீது தொடர்ச்சியாக நீடித்து வந்த இராணுவ நடவடிக்கைகளின் உச்சக் கட்டமாகும்.

இராணுவத்தினர் மீது தாக்குதலை மேற்கொள்ளும் தளமாக வைத்தியசாலை என்றுமே அமைந்ததில்லை என்பதைப் பிரசைகளான நாம் நன்கறிவோம். வைத்தியசாலை தளமாகப் பாவிக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டு வடக்கில் உள்ள அப்பாவி மக்களைத் துன்புறுத்துவதற்காக சிருஷ்டிக்கப்பட்ட நொண்டிச் சாட்டாகும்.

- இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

# போராளிகளை கைது செய்ய சிப்பாய்கள் தந்திரம்

மட்டக்களப்பு, ஏப். 8

மட்டக்களப்பு மாவட்டத்தில் போராளிகளைக் கைது செய்ய ஆயுதப் படையினரால் பல்வேறு வகையான யுக்திகள் கையாளப்பட்டு வருகின்றன.

நகரிலும் கடைத் தெருவிலும் படையினர் சாரம், பெனியன் அணிந்து நடமாடுகிறார்கள்.

லொறி, பஸ், தனியார் வாகனம் போன்றவற்றிலும் சிவில் உடையில் பயணம் செய்கிறார்கள்.

சந்தேகமானவர்களைக் கைது செய்கிறார்கள் துப்பாக்கிப் பிரயோகமும் செய்கிறார்கள். (இ-21)

## ருக்மன் கட்சிக்கு அங்கீகாரம் இல்லை

கொழும்பு, ஏப்ரல் 8

திரு. ருக்மன் சேனநாயக்காவை பிரதம அமைப்பாளராகக் கொண்ட எக்ஸத் லங்கா கட்சிக்கு தேர்தல் ஆணையாளர் அங்கீகாரம் வழங்கவில்லை.

"அங்கீகாரம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் எனது கட்சி தேர்தல்களில் போட்டியிடும்" — இப்படி திரு ருக்மன் சேனநாயக்கா தெரிவித்தார் (இ-எ)

பிள்ளைகளை

# பெற்றோர்கள் பெற்றெடுத்தாலும் தத்தெடுத்தவர் ஆசிரியரே

## கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஏப். 8

பிள்ளைகளைப் பெற்றோர்கள் பெற்றெடுத்தாலும் அவர்களை தத்தெடுத்தவர்கள் ஆசிரியர்களே. மாணவரின் குடும்பச் சூழல், பெற்றோரின் வருமானம் என்பவற்றை அறிந்து உளவியல் மனப்பாங்குடன் கல்வி போதிக்க வேண்டியது ஆசிரியர்களின் கடமை.

யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மக்சூர் இவ்வாறு கூறினார்.

கட்டிலங்கைச் சங்கீத சபையினர் நடத்தும் ஆசிரியர் தரத் தேர்வுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான வதிவிடக் கருத்தரங்கின் முதல் நாள் நிகழ்ச்சிகள் திங்கட்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகின.

கருத்தரங்குக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலே பணிப்பாளர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்—

ஆசிரியர்கள் இரக்க சிந்தையுடன் மருத்துவர்கள் போல் சேவை மனப்பாங்குடன் சேவையாற்ற வேண்டும் என்றார்.

பிரதம கல்வி அதிகாரி திரு.கு. சோமசுந்தரம் உரையாற்றுகையில்—

இசைக் கச்சேரிகளை மக்கள் கேட்டு ரசித்தால் தான் இசை வளரும். வடபகுதியில் இசைக்கச்சேரிகள் மிகமிகக் குறைவாக இடம்பெறுவது துரதிஷ்டம் என்றார்.

பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் உரையாற்றுகையில்—

எந்த ஒரு மொழிக்கும் இல்லாத கலை, கலாசார பண்பாடுகள் எமது மொழிக்கு உண்டு என்றார்.

பிரம்ஸ்ரீ என் என் நடராசன், திரு க. சொக்கலிங்கம், திரு வ ஆறுமுகம், கலாநிதி சி. மௌனகுரு திரு எஸ்.வி.எம் நவரத்தினம், திரு ப திலைராசா ஆகியோரும் கருத்துரைகள் வழங்கினர்.

கருத்தரங்கை திரு. ஆர். சிவானந்தன், திரு. எஸ். கணபதிப்பிள்ளை ஆகியோர் நெறிப்படுத்தியிருந்தனர். (இ-வ)

# விளையாட்டரங்கு

பாடசாலைகளுக்கிடையிலான

## உடற் பயிற்சி போட்டி முடிவுகள்

**சாவகச்சேரி வட்டாரம்**

ஆண்கள் 13 வயதுப் பிரிவு:- சாவகச்சேரி இந்துக்கல்லூரி முதலிடம்.

17 வயதுப் பிரிவு:- திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் முதலாமிடம் வீரசிங்கம் மகாவித்தியாலயம் இரண்டாமிடம்.

19 வயதுப் பிரிவு:- டிறிபேக் கல்லூரி முதலாமிடம்.

பெண்கள் 13 வயதுப் பிரிவு:- திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் முதலாமிடம்.

17 வயதுப் பிரிவு:- திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் முதலாமிடம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி இரண்டாமிடம். சாவகச்சேரி மகளிர் கல்லூரி மூன்றாமிடம்.

19 வயதுப் பிரிவு:- டிறிபேக் கல்லூரி முதலாமிடம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி இரண்டாமிடம். திருநாவுக்கரசு மகா வித்தியாலயம். மூன்றாமிடம்.

**வட்டுக்கோட்டை வட்டாரம்**

ஆண்கள் 13 வயதுப் பிரிவு;- சங்கானை சைவப் பிரகாச மகா வித்தியாலயம் முதலாமிடம், ஜசிந்தா ரோ க.த. பாடசாலை இரண்டாமிடம்.

17 வயதுப் பிரிவு:- சங்கானை சைவப்பிரகாச மகா வித்தியாலயம் முதலாமிடம், விக்ரோறியாக் கல்லூரி இரண்டாமிடம் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மூன்றாமிடம்.

19 வயதுப் பிரிவு;- மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் முதலாமிடம் விக்ரோரியாக் கல்லூரி இரண்டாமிடம்.

பெண்கள் 13 வயதுப் பிரிவு:- சங்கானை சைவப் பிரகாச வித்தியாலயம் முதலாமிடம் ஜசிந்தா ரோ க. த. பாடசாலை இரண்டாமிடம் சித்தன்கேணி கணேச வித்தியாலயம் மூன்றாமிடம்.

17 வயதுப் பிரிவு;- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி முதலாமிடம் சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயம் இரண்டாமிடம்

19 வயதுப் பிரிவு:- சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி முதலாமிடம் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் இரண்டாமிடம், (இ-7)

(தொடரும்)

# யாழ் நீதிவானின் துணிச்சலுக்கு பாராட்டு

காங்கேசன்துறை, ஏப். 8

ஒரு போராட்டசூழ் நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாங்கள் பலவகை இராணுவ அட்டூழியங்களினால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இந்த வேளை தமிழ் அரச உயர் அதிகாரிகள் பலர் வாய்மூடி மௌனிகளாக இருந்து அரசின் அட்டூழியங்களை அங்கீகரிப்பது போல் கடமையாற்றும் வேளையில் யாழ்ப்பாண நீதிவானின் சமீபகால நடவடிக்கை பாராட்டுக்குரியதாக இவரது துணிச்சலைப் பார்த்து மற்றைய அரசாங்க உயர் அதிகாரிகள் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

கருவில் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற விசேஷ பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அதன் உபதலைவர் திரு க சிவசம்பு மேற்கண்டவாறு கூறினார்.

அண்மையில் யாழ்ப்பாண ஆஸ்பத்திரி மீது ஏவப்பட்ட இராணுவச் ஷெல்லினால் மரணம் அடைந்த நோயாளர்களின் மரண விசாரணைகளின் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி வழங்கிய தீர்ப்பினைப் பாராட்டி திரு சிவசம்பு உரையாற்றினார்

அவர் மேலும் உரையாற்றுகையில் அரசின் உயர்பதவி ஒன்றில் இருந்தும் எவ்வித பயமுமின்றி அரசின் கொடுமைகளை வெளிக்காட்டி உள்ள யாழ்ப்பாண நீதிவானின் இவ்வாறான துணிவானது இனிவரும் காலங்களில் இராணுவ அட்டூழியங்களை குறைப்பதற்கு வழிவகுக்கும் என்றார்.

மேற்படி உரையின் பிரதி ஒன்றை யாழ்ப்பாண நீதிவானுக்கு அனுப்பி வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது (இ-16)

## பாடசாலைக்கு கட்டடம் இலவசம்

கிளிநொச்சி, ஏப்ரல் 8

கிளிநொச்சி அம்பாள் நகர் கிராம அபிவிருத்திச் சங்கம் கட்டடம் ஒன்றைத் தனது செலவில் கிளிநொச்சி திருவையாறு அ த க. பாடசாலைக்கு இலவசமாக கட்டிக்கொடுக்க முன்வந்துள்ளது. (இ-76)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# பல்கலைக்கழககல்லூரிகள் வடக்கில் நிறுவப்படவேண்டும்

## பரிசளிப்பு விழாவில் உரை

புங்குடுதீவு, ஏப் 8

தமிழ் மாணவர்களின் உயர் கல்வியைக் கருத்தில் கொண்டு வட இலங்கையில் பல பாகங்களிலும் பல்கலைக்கழகக் கல்லூரிகள் நிறுவப்பட வேண்டும் அவை யாழ்- பல்கலைக் கழகத்தின் அங்கங்களாகச் செயற்பட வேண்டும். குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கடல் வளம், வனவளம், சமுத்திரவியல், முத்துக்குளித்தல் ஆகிய பாடப் புலன்கள் கொண்ட கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும்.

யாழ்- பல்கலைக்கழகக் கல்வித்துறை பேராசிரியர் ப. சந்திரசேகரம் மேற்கண்டவாறு கூறினார்.

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா வித்தியாலய அதிபர் திரு. த துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

விழாவின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் பேராசிரியர் சந்திரசேகரம் மேலும் கூறியதாவது:-

உலகிலேயே மிகக் குறைந்த நாட்கள் பள்ளிக் கூடங்கள் இயங்குவது நமது நாட்டில் தான். பல நாடுகளில் வருடம் 200-240 நாட்கள் வரை பாடசாலைகள் இயங்குகின்றன.

நமது நாட்டில் வருடத்தில் 50 சதவீத நாட்களே பாடசாலைகள் இயங்குகின்றன இந்நிலை மாற வேண்டும்

கல்வி அமைச்சு இது தொடர்பாகச் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வரவுள்ளது பள்ளிக்கூட நாட்களை அதிகரிக்கவும், படிக்கும் பொழுது மாணவர்களின் திறமைகளைத் தனியாகக் கணிக்கவும் திட்டமிட்டுள்ளது.

இதனை நமது ஆசிரியர்களும், பெற்றோர்களும் நன்மனதுடன் வரவேற்க வேண்டும்.

ஆசிரியர் கல்வியைப் பொறுத்தவரையில் தமிழ்ப் பகுதிகளில் உள்ள ஆசிரியர் கலாசாலைகள் படிப்படியாக மூடப்பட்டு வருவது கவலைக்குரியது.

[illegible] சிங்கள மொழி [illegible] கல்லூரிகளை நிறுவியுள்ளது. ஆனால் தமிழ்மொழிக் கல்லூரி ஆரம்பிக்கப்படவில்லை

தேசிய கல்விச் சபை ஒன்று நிறுவப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது அதில் தமிழ் கல்விமான்கள் எவரும் இடம் பெற்றதாகத் தெரியவில்லை

இந்நிலையால் இந்நாட்டில் உள்ள தமிழ் மக்கள் தங்கள் மரபுவழியில் சீரிய கல்வியை தங்கள் பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுக்க விழிப்புடன் செயற்பட வேண்டும்.

ஆசிரியர்களுடன் ஒத்துழைத்துப் பாடசாலைகளைத் திறம்பட இயக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

தீவுப்பகுதி தெற்குப் பிரிவு உதவி அரச அதிபர் திரு. இ. சடாட்சரசன் முதலாவது பேசுகையில் கல்விச் செல்வம் ஒன்று தான் பிறரால் நம்மிடமிருந்து கவரமுடியாதது என்றார். (இ-131)

# அச்சுவேலியில் இன்று பிரார்த்தனை தினம்

யாழ்ப்பாணம், ஏப். 8

சமகாலப் பிரச்சினைகள் தீர்வதற்கும் வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குமான பிரார்த்தனைத் தினம் இன்று புதன்கிழமை அச்சுவேலியில் அனுஷ்டிக்கப்படுகிறது

அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயப் பங்குத் தந்தை அருட்திரு றெக்ஸோ அடிகளார் இத்தினத்தை ஒழுங்குபடுத்தியுள்ளார்.

வயாவிளான், ஒட்டகப்புலப் பகுதிப் பங்கு மக்களையும் கலந்து கொள்ளுமாறும், இவனுமானவர்களை உபவாசம் மேற்கொள்ளும்படியும் பங்குத்தந்தை கேட்டுள்ளார்.

இன்று காலை அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் விசேஷ பிரார்த்தனைகளும், ஆராதனைகளும் இடம்பெறும். (இ-எ)

மக்கள் முகம்

## சத்தியபுரம் திருச்சபை

மானிப்பாய், ஏப்ரல் 8

மானிப்பாய் வடக்கு சத்தியபுரம் திருச்சபையின் உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: கலாநிதி டி. சி. இரத்தினசிங்கம், உபதலைவர் திருமதி ஏ. ஆர் தம்பிராசா.

செயலாளர்: திரு. அ. பிராங்களின், உபசெயலாளர் திருமதி சிவரத்தினம், பொருளாளர்: திரு எம். வீ எஸ். இராசதுரை, திருமதி இராசரத்தினம் (ஓய்வு நல்பாடசாலை ஆசிரியை)

இளைஞர் சமூக பிரதிநிதிகள் செல்வன் டேவிட் மதிவரணம், திரு அ. அருளானந்தம், திருமதி துரைசிங்கம், திருமதி மாரிமுத்து (இ-80)

# சொறி, சிரங்கு நோய்களைத் தடுக்க பாடசாலைகளில் பிரசாரம்

மானிப்பாய், ஏப். 8

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் வி. ஸ்ரீகாந்தா பாடசாலை மாணவர்களுக்கிடையே பரவும் சொறி சிரங்கு நோய்களைத் தடை செய்யும்முகமாக பாடசாலைகளுக்கு சென்று மாணவர்களுக்கு விளக்கமும், சிகிச்சையும் அளிப்பதில் ஈடுபட்டுவருகிறார்.

அண்மையில் நவாலியிலுள்ள அட்டகிரி சைவ வித்தியாசாலைக்கு அவர் விஜயம் செய்து பரிசோதனை செய்த போது 80 சதவீதமானோர் இந்நோயினால் பீடிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை டாக்டர் பி பேரானந்தம் ஆனைக்கோட்டைப் பகுதி சுகாதாரப் பரிசோதகர் திரு. கே. கார்த்திகேசு ஆகியோரின் உதவியுடன் இம்மாணவர்களுக்கு சொறி, சிரங்குக்கான கிறீம் மருந்து வழங்கப்பட்டதுடன். நோய் பரவாது இருப்பதற்கு வேண்டிய சுகாதார அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன

பாடசாலை அதிபர் திரு இ. வல்லிபுரம் மாணவர்களின் பரிசோதனை சிகிச்சைக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தார். (இ-90)


★ பிரயாணத்திற்குத் தயாராகுங்கள்!

உங்களைப் பாதுகாப்பாகக் கூட்டிச் செல்ல

★ GLORIA TRAVELS ★

● ஆயத்தமாக இருக்கிறது ●

★ Seaman ★ Deck Boy ★ Oiler

★ A. B. (Sailor) ★ Mess Boy

ஆகிய துறைகளில் பயிற்சி உள்ளவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்

★ அவுஸ்திரேலியா செல்ல விரும்புகிறவர்கள் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

★ பிரான்ஸ் ★ ஜேர்மனி ★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் கொழும்பிலிருந்து அழைத்துச்செல்வார்

பாஸ்போட், பொண்ட் (BOND), விசா, ரிக்கட் ஆகியனவும் செய்து தரப்படும்

★ GLORIA TRAVELS ★

சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய்

★ எமக்கு வேறு கிளைகள் கிடையாது

(C 20)



பிரயாண ஒழுங்குகள்

குவைத்

பின்வருபவர்களுக்கு பிரயாண ஒழுங்குகள் உடன் செய்து தரப்படும்.

- ✶ தொழிலாளர்: (Labour)
- ✶ தச்சுவேலை (Carpenter)
- ✶ மேசன் (Mason)
- ✶ கனரகவாகன சாரதி (H. E. Operator H. D. Driver)

பாஸ்போட் 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்

கொழும்பு முகவரி:

Construction & Development Ltd.
37, Jeyasingha Mawatthe,
NUGEGODA.

V. P. பாலா
C/o N. V. பொன்னுத்துரை,
பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு கோண்டாவில். (1778)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

அதிகமாகச் சிந்திக்க முடியாதவர்கள்தான் அதிகமாகப் பேசுகின்றார்கள்.

— ஜோன் ட்ரைடன்

உதயன்
இல. 15, இருபாலைமுனை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22078
யாழ்ப்பாணம் 08-04-1987 த.பெ.இல. 22

# ஓ! பணமே பணமே!

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் படும் கஷ்டங்கள் போதாதென்று புதிதாக - மேலதிகமாகவும் ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் பண நோட்டுகள், நாணயங்கள் புழக்கத்துக்கு இல்லை. மக்களின் பணப் பரிமாற்றத்துக்குத் தேவையான அளவுக்கு நோட்டுகள் புழக்கத்தில் இல்லை. அவற்றுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது; தட்டுப்பாடு உண்டாகியுள்ளது. அதன் காரணமாகப் பணப் புழக்கம் மந்த நிலைக்கு வந்திருக்கிறது. மந்த நிலை ஸ்தம்பித நிலையாகவும் மாறக்கூடும்.

பணப்புழக்கம் பாதிக்கப்பட்டிருப்பதற்கு அரச படைகளின் இராணுவ நடவடிக்கைகளே காரணம். யாழ் கோட்டை முகாமில் உள்ள வங்கிக் கிளைகள் இப்போது இயங்குவதில்லை. அவற்றில் பணிபுரியும் ஊழியர்கள் கோட்டைக்குப் போக அஞ்சுகிறார்கள்.

கோட்டைக்கு அருகில் எவரும் நடமாட முடியாது. அவ்வாறு நடமாடுவோர் போராளிகள் என்ற சந்தேகத்தின் பேரில் சுடப்படுகிறார்கள்.

கடந்த திங்கட்கிழமை மாலையும் பிரதான வீதியில் ஹோட்டல் ஒன்றுக்கு முன்பாக நின்ற இளைஞர் கோட்டைக்காரரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உள்ளார்.

நிலைமை இவ்வாறு இருக்கும்போது வங்கி ஊழியர் எப்படிக் கோட்டைக்குச் செல்வர்? "இத்தனை மணிக்கு ஊழியர்கள் கோட்டை வங்கியில் பணிபுரிய வருகிறார்கள். அவர்களை ஒன்றும் செய்யாதீர்கள்" என்று கோட்டை மேலிடத்துக்கு வங்கி மேலிடம் அறிவிக்கவும் வசதி எதுவும் இல்லை. உள்ளூர் தொலைபேசி சேவை துண்டிக்கப்பட்டு விட்டதால் நேரில் சென்று தான் அறிவிக்க வேண்டும். உயிரைப் பணயம் வைத்து கோட்டைக்கு நேரில் சென்று விடயத்தைக் கூற எவர்தான் முன்வருவர்?

குடாநாட்டின் தொலைபேசிச் சேவையும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. அதன் நிமித்தம் இராணுவத்தினர் தாமாக நினைத்து சில நிமிட நேரமாவது தொலைபேசியை இயங்க வைத்து, வங்கி மேலிடத்துக்கு அல்லது அரசாங்க அதிபருக்கு "இன்ன நேரத்துக்கு வங்கி ஊழியரை வந்து பணத்தை எடுக்கச் சொல்லுங்கள் அல்லது பணியாற்றச் சொல்லுங்கள்" என்று கூறினால் தவிர கோட்டையிலிருந்து பணத்தை எடுத்து வருவதோ அங்கு வைத்து வழங்குவதோ இப்போதைக்குச் சாத்தியமாகாது.

இங்கிருந்து வங்கி அதிகாரி ஒருவர் கொழும்பு சென்று, கோட்டையில் இருந்து பணத்தை எடுத்து வருவதற்கு மேலிடத்தினூடாக ஏற்பாடுகளைச் செய்வதும் ஒரு மாற்றுவழியாக அமையும்.

மாற்று ஏற்பாடு எதுவும் மேற்கொள்ளப்படாவிடின் — வங்கி மற்றும் அரச உயர் அதிகாரிகள் இதில் அக்கறை எடுக்காதிருந்தால் குடாநாட்டில் பணப்புழக்க நெருக்கடி மோசமடையும்.

பணம் இல்லாதவன் பிணம் என்ற நிலை மேலோங்கி நிற்கும் காலம் இது. அது இல்லையெனில் — பணத்தின் பிரதிநிதியான கரன்ஸி நோட்டுகள் இல்லையெனில் — மக்கள் வாழ்வே செத்துவிடும். அன்றாட வாழ்க்கையின் அடிப்படையாக விளங்கும் பணம் இல்லையேல் இங்கு பெரும் நெருக்கடி நிலை தோன்றும்!

ஷெல்லும், குண்டும் அடித்துத் தமிழனைப் பிணமாக்கும் அக்கிரமத்துக்கு மேலதிகமாக பணம் கிடைக்காமற் செய்து அவனைப் பிணமாக்கும் மற்றொரு சூழ்ச்சியாகவும் இது இருக்கலாம்.

எரிபொருள் தடை, தொலைபேசித் தொடர்புத் தடை, அபிவிருத்தித்தடை ஆகியவற்றின் வரிசையில் நிதித் தடைக்கு முன்னோடியாகத்தான் பணநோட்டுப் புழக்கத் தடையும் உருவாக்கப்பட்டதோ, யார் அறிவார்?

பொருளாதாரத் தடை இன்னொரு நாட்டின் மீது விதிக்கப்பட வேண்டியது. எரிபொருள், தொலைபேசியுடன், பணமும் சேரும் போது தமிழ்ப் பகுதியை அரசு தனிநாடாகக் கருதுவது மேலும் ஊர்ஜிதமாகிறது எனவும் ஒருவகையில் சொல்லலாம்.

நோக்கம் எதுவாக இருந்தாலும் கரன்ஸித் தட்டுப்பாடு நெருக்கடியான கட்டத்தை அடையாமலிருக்க நாம் என்ன செய்யப்போகிறோம்? மாற்றுவழி குறித்துச் சிந்திக்க வேண்டியது அவசியம்.

பழைய காலத்தில் இருந்த பண்டமாற்று முறையைக் கைக்கொண்டு அரசின் நடவடிக்கையை முறியடிக்க முடியுமா? அது இந்தக் காலத்தில் நடைமுறைச் சாத்தியமானதா?

எரிபொருள் தடையை எதிர்கொண்டது போல நிதி விடயத்திலும் எதிர்கொள்ள முடியாதா? இவற்றை இப்போதே ஆராய்ந்து செயலில் இறங்க வேண்டும்.

இல்லையேல் வெள்ளம் வந்தபின் அணைகட்டும் நிலையாகத்தான் முடியும். அதனால் மக்களுக்குப் பல கஷ்டங்கள் உருவாகும்.

## பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

முழங்காவில், ஏப்ரல் 8

கடந்த சில தினங்களாக தடைப்பட்டிருந்த சங்குப்பிட்டி — மன்னார் பஸ் சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

ஞாயிறு மாலை வந்த பஸ் திங்கள் காலை திரும்பத்துடன் திகாளும் இருபஸ்கள்வந்து திரும்பியுள்ளன.

பிரயாணிகள் வெள்ளாங்குளம் முகாமில் கடும்சோதனைக்குட்படுத்தப்பட்டார்கள்.

## கோதுமை உற்பத்தி அதிகரிப்பு

இஸ்லாமாபாத், ஏப்.7

பாகிஸ்தானில் கோதுமை உற்பத்தி இவ்வாண்டு அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தேவைக்கு மேலதிகமாக ஒரு மில்லியன் மெட்ரிக்தொன் தானியம் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

## பொன்விழா

சென்னை, ஏப்ரல் 7

மொரிஷியஸ் தீவின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பொன்விழாக் கொண்டாட்டங்கள் ஒரு வார காலம் நடந்தன.

தமிழ் நாட்டில் இருந்து தமிழறிஞர் திரு ம. பொ. சிவஞானகிராமணியார் இக்கொண்டாட்டங்களில் கலந்து கொண்டார். (ஒ-எ)

# ஆப்கானில் நிலை கொள்ளும் எண்ணம் ரஷ்யாவிற்கு இல்லை

## சோவியத் சென்று திரும்பிய தட்சர் தகவல்

லண்டன், ஏப்.7

ஆப்கானிஸ்தானில் நிலைகொள்ளும் எண்ணம் ரஷ்யாவிடம் இல்லை. ரஷ்ய அதிபர் மிக்கையில் கொர்பச்சேவ் ஜனநாயகத்தை நன்கு வரவேற்று சர்வாதிகாரப் போக்கையும் எதிர்க்கின்றார்.

இவ்வாறு பிரிட்டிஷ் பிரதமர் மாகிரட் தச்சர் லண்டனில் பாகிஸ்தான் பிரதமர் முகமட்கான் ஜுனேஜோவை வரவேற்றுப் பேசுகையில் தெரிவித்தார்.

நட்சத்திர யுத்த விசுகணை தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை விரைவிலேயே அமெரிக்காவும் ரஷ்யாவும் கைச்சாத்திடும் சர்வதேச ரீதியாக அமைதியையும் சமாதானத்தையும் வளர்ப்பதில் கொர்பச்சேவிற்கு உள்ள ஆர்வம் போற்றும்படியாக அமைந்துள்ளது.

ரஷ்யா வின் வெளிப் போராட்டத்தில் அக்கறை செலுத்தவில்லை. அதற்கான செலவை நசுக்கப்படும் இனங்களின் மீட்சிக்காக உதவக் காத்திருப்பதாக ரஷ்ய அதிபர் கொர்பச்சேவ் கருதுகிறார்.

ஆப்கானில் நிலை கொண்டுள்ள ரஷ்ய துருப்புகளால் பாகிஸ்தானுக்கு ஆபத்து எதுவும் வராது என்ற உறுதியையும் பிரிட்டிஷ் பிரதமர் பாக் பிரதமரிடம் தெரிவித்தார். (ஒ)

## புதுவை எதிர்கட்சி எது? விரைவில் தெரியும்

புதுவை, ஏப்.7

புதுச்சேரி சட்டப் பேரவையிலிருந்து நீக்கப்பட்ட ஒரு உறுப்பினரை மீண்டும் சேர்த்துக் கொள்வது பற்றி சபாநாயகர் ஒரு முடிவு எடுக்கும் வரை அ.தி.மு.க எதிர்க்கட்சியாக திகழும்.

இதுபற்றிய முடிவு விரைவில் மேற்கொள்ளப்பட்டுவிடும்.

இவ்வாறு புதுச்சேரி சட்டப் பேரவை சபாநாயகர் காமிச்செட்டி அறிவித்தார்.

ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட தி.மு.க தனக்கு எதிர்க்கட்சி அந்தஸ்து வழங்க வேண்டும் எனக் கோரிவருகின்றது.

சென்ற டிசம்பர் மாதத்தில் எதிர்க்கட்சியாக திகழ்ந்த அ.தி.மு.க விலிருந்து இருவர் பதவி நீக்கம் செய்யப்பட்டதால் நான்காகக் குறைந்துவிட்டது. (ஒ)

## பாதுகாப்பு பலப்படும்

வளைகுடாவிற்கு அருகே நிலை கொண்டுள்ள அமெரிக்கக் கடற்படை அதன் பலத்தை மேலும் அதிகரித்துக் கொள்ள வேண்டும் என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் கருத்து வெளியிட்டார். (ஒ)

## திரிபுரா அகதிகள் பற்றிய பேச்சுத் தோல்வி

டாக்கா, ஏப்ரல் 7

பங்களாதேஷின் தென் பகுதியில் 'சாந்திவாகினி' கெரில்லா இயக்கத்தினர் நடத்தும் பிரிவினைப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் இந்திய மாநிலமான திரிபுராவினுள் நுழைந்தவர்களை திருப்பி அழைப்பது பற்றியும் நடந்த பேச்சுவார்த்தைகள் தோல்வி கண்டன.

இந்திய வெளியுறவு அதிகாரிகளும் பங்களாதேஷ் வெளியுறவு அதிகாரிகளும் புதுடில்லியில் இப்பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

பங்களாதேஷின் தென் பகுதியில் சுமார் ஐயாயிரத்து அறுநூறு சதுர மைல் பிரதேசம் தமக்கு திருப்பி வழங்கப்பட வேண்டும் என்று கோரி கடந்த 14 வருடங்களாக சாந்திவாகினி இயக்கம் போராடி வருகிறது.

பங்களாதேஷ் துருப்புக்களுக்கும் கெரில்லாக்களுக்கும் இடையிலான மோதல்களில் இருந்து தப்புவதற்காக பங்களாதேஷைச் சேர்ந்த இருபதினாயிரம் ஆதிவாசிகள் திரிபுராவினுள் தஞ்சம் புகுந்துள்ளனர். (ஒ)

## ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்

டாக்கா, ஏப்ரல் 7

பங்களாதேஷில் மாணவர் — பொலிஸ் மோதல்களின் எதிரொலியாக ஆசிரியர்களும் ஏனைய கல்வி இலாகா ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதனுல் ஏற்பட்ட கலவரங்களில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர். 43 பேர் பொலிஸாரால் கைதாகினர். (ஒ)

## தீவிர இயக்கம் ஆரம்பம்

சண்டிகார், ஏப்ரல் 7

பஞ்சாப் தீவிரவாதிகள் மதுபானம், புகையிலை, புலால் ஆகியவற்றிற்கு எதிரான தீவிர இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள்.

பஞ்சாப்பில் உள்ள பல மதுபானசாலைகள் நேற்று இரவு தீக்கிரையாக்கப்பட்டன. மதுபானக் கடைகளை சேதமடையச் செய்வோரை கண்ட இடத்திலேயே சுடும்படி பஞ்சாப் மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. (ஒ)

## இராணுவம் ஆராய்ந்தது

தாய்லாந்தின் முன்னுள் பிரதமர் கப்யூனிஸ்ட் அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த முயன்று வருகிறார் என்ற சந்தேகத்தின் பெயரில் ராணுவம் அவரது இல்லத்தை சுமார் பத்து மணி நேரம் தருவி ஆராய்ந்தது.

## வெளி உலகில்

## எண்ணெய் வளம் யேமனில் அதிகரிப்பு

சனா, ஏப் 7

வடயேமன் வரும் நவம்பர் மாதம் தொடக்கம் எண்ணெய் ஏற்றுமதி செய்யவுள்ளது. ஆரம்பத்தில் நாளொன்றிற்கு சுமார் ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் பீப்பா எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி அலி அப்துல்லா சாலிப் தெரிவித்தார்.

புதிய எண்ணெய் வளங்கள் கண்டுபிடிக்கப்படுவதால் நாளாந்த ஏற்றுமதியை நாலு லட்சம் பீப்பாவாக எதிர்காலத்தில் அதிகரிக்க முடியும் எனவும் அவர் கூறினார்.

செங்கடல் பகுதியில் பெருமளவு எரிவாயுவை பெறக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது (ஒ)

# கச்சதீவுப் பிரச்சினை இந்திய உயர் நீதிமன்றில்

## மத்திய, மாநில அரசுகளுக்கு நோட்டீஸ்

புதுடில்லி, ஏப். 7

கச்சதீவு விவகாரம் சம்பந்தமாக ஆஜராகி நிலைமையை விளக்கும்படி இந்திய உயர் நீதிமன்றம், மத்திய அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தாக்கல் செய்த ரிட் மனுவை பரிசீலனை செய்த பின்னரே இந்த உத்தரவை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் திரு இ. எஸ் வெங்கடராமையா, திரு. கே. என். சிங் ஆகியோர் பிறப்பித்தனர்.

டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தனது மனு சார்பில் தானே தோன்றி வாதாடினார்.

மனுவில் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்திருப்பதாவது:-

### தமிழக மீனவர் உரிமை

கச்சதீவு, ஐந்து சதுர மைல் விஸ்திரணம் உடையது. இந்தியாவின் கரையில் இருந்து 24 மைல் தூரத்தில் இத்தீவு உள்ளது.

எமது நினைவுக்கு அப்பாற்பட்ட காலத்தில் இருந்தே தமிழ்நாட்டு மீனவர்கள் கச்சதீவில் தங்கியிருந்து மீன்பிடித்து வந்துள்ளனர். மீன்பிடி வலைகளை தீவில் காய வைத்தும் உள்ளனர். ஓய்விடமாகவும் தீவைப் பயன்படுத்தி வந்தனர்.

ஆண்டுதோறும் மார்ச் 14ஆம் திகதி இடம் பெறும் புனித அந்தோனியார் திருவிழாவுக்கு தமிழ் நாட்டில் இருந்தும் மக்கள் சென்று வந்தனர்.

### உடன்படிக்கை

1974இல் கச்சதீவு சம்பந்தமாக ஓர் உடன்படிக்கை இந்திய-இலங்கை நாடுகளுக்கிடையே கைச்சாத்தானது.

உடன்படிக்கையின் 5ஆம் ஷரத்தின்படி இந்திய மீனவர்களும் யாத்திரீகர்களும் கச்சதீவுக்கு விசா மற்றும் பயண தஸ்தாவேஜுகளின்றிச் சென்றுவர வழி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி சென்ற மாதம் 13ஆம் திகதி நானும் இன்னும் சிலரும் கச்சதீவு செல்ல முயற்சித்தோம். மதுரையில் வைத்து பொலீஸார் என்னைக் கைது செய்தனர். இது சட்டவிரோதமானது.

### மீனவர் கொலை

இந்த உடன்படிக்கை அமுல் நடத்தப்படுவது இல்லை. உடன்படிக்கை பிரகாரம் கச்சதீவுக்குச் செல்ல முயன்ற இந்திய மீனவர்கள் சிலர் கொல்லப்பட்டனர்.

1974இல் செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டை மீறி இலங்கை அரசு சில சட்டங்களை நிறைவேற்றி உள்ளது. கச்சதீவு இலங்கையின் நியாயாதிக்கத்தின் கீழ் வந்தாலும் இந்திய மீனவர்கள், யாத்திரீகர்கள் அத்தீவுக்குச் சென்றுவர பூரண சுதந்திரம் உண்டு.

சிறிய படகுகள் கச்சதீவுக்குச் செல்வதைத் தடைசெய்யும் சட்டம் ஒன்றை 1984இல் இலங்கை அரசு நிறைவேற்றியுள்ளது.

இந்திய மீனவர்கள் அத்தீவுக்குச் செல்லும் உரிமையை இது மறுப்பதாகும். இந்திய அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமைகள் சட்டத்தின் 21, 19ஆம் ஷரத்துக்களின் கீழ் கச்சதீவுக்கு செல்லக்கூடிய உரிமையையும் பாதுகாப்பையும் இந்திய மீனவருக்கும் யாத்ரீகர்களுக்கும் வழங்க இந்திய அரசை நடவடிக்கை எடுக்கும்படி உயர் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்—

—இப்படி டாக்டர் சுப்பிரமணியசுவாமி தனது மனுவில் கூறியிருந்தார். (உ-எ)

## வீட்டைப் பார்க்கச் சென்ற பெண்மணி எங்கே?

திருகோணமலை, ஏப்ரல் 8

திருகோணமலை செல்வநாயகபுரம் என்னும் இடத்தில் உள்ள தனது வீட்டைப் பார்த்து வரச் சென்ற 35 வயதான அழகேந்திரராசா யோகராணி என்ற இளம் பெண் வீடு திரும்பவில்லை என்று திருகோணமலை பிரஜைகள் குழுவுக்கு முறையிடப்பட்டிருக்கிறது. இளப்பெண்ணின் கணவர் பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

வன்செயல்களைத் தொடர்ந்து செல்வநாயகபுரத்தில் வசித்து வந்த தமிழ் மக்கள் வீடு வாசல்களைக் கைவிட்டு விட்டு திருமலை நகருக்குக் குடிபெயர்ந்து விட்டனர்.

அப்படிக் குடிபெயர்ந்தவர்களில் திருமதி அழகேந்திரராசா யோகராணியும் ஒருவர்.

இரண்டு குழந்தைகளுக்குத் தாயாரான இவர் சென்ற மாதம் 29 ஆம் திகதி தனது வீடு எப்படி உள்ளது என்பதைப் பார்த்துவர செல்வநாயகபுரம் சென்றார்.

அன்று பிற்பகல் [illegible] செல்வநாயகபுரத்துக்குச் சென்றவர் இம்மாதம் முதலாம் திகதிவரை வீடு திரும்ப[illegible]

திருமலை நகரில் வாடகைக்கு வீடு எடுத்து வசித்து வந்த இவரின் மறைவு பற்றி இராணுவ [illegible]

## செய்திக்கொத்து

### மீன் வியாபாரி சூட்டுக்குப் பலி

மட்டக்களப்பு, ஏப்ரல் 8

ஆயுதப் படையினரின் தேடுதல் நடவடிக்கையின்போது எதிர்பாராத வகையில் சிக்கிய மீன் வியாபாரி துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியானார்.

இச் சம்பவம் வந்தாறுமூலையில் நடைபெற்றது.

கந்தவனம் (37 வயது) என்னும் 4 பிள்ளைகளின் தந்தையே இறந்தவராவர்.

இவரது சடலம் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டது. (இ-81)

### நாவற்குழியில் மோதல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட சிப்பாய்களை நோக்கி விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இச் சம்பவம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதேவேளை இப் பகுதிக்கு வந்த ஹெலிகொப்டர் ஒன்றும் ஷெல்தாக்குதலையும் 50கலிபர் தாக்குதலையும் நடத்தியது. (உ-10)

### தம்பிமுத்துவை விசாரித்த சிப்பாய்கள்

மட்டக்களப்பு, ஏப்ரல் 8

மட்டக்களப்பு பிரஜைகள் குழு அலுவலகத்துக்கு திடீரென வருகை தந்த ஆயுதப்படையினர் செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து எப்போ நாடு திரும்புவார்? என விசாரித்தனராம்.

சாம் தம்பிமுத்து ஜெனிவா, லண்டன் பயணத்தை முடித்து விட்டு தற்போது புதுடில்லியில் தங்கியுள்ளார்.

இம்மாத நடுப்பகுதியில் நாடு திரும்புகிறார். (இ-21)

### பதவி உயர்வு

கிளிநொச்சி, ஏப்ரல் 8

கிளிநொச்சி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றிய திரு என். செல்வராசா கடந்த முதலாம் திகதி முதல் மாவட்ட உத்தியோகத்தர் கிராம அபிவிருத்தி தரத்திற்குப் பதவி உயர்வு பெற்றார். (இ-76)

### ஐவரும் விடுதலை

திருகோணமலை ஏப்ரல் 8

திருகோணமலை மத்திய வீதியில் கைதுசெய்யப்பட்ட ஐந்து தமிழ் இளைஞர்களும் சென்ற மாதம் 31-ஆம் திகதி விடுவிக்கப்பட்டனர்.

சென்ற மாதம் 8-ஆம் திகதி மத்திய வீதியில் நடத்தப்பட்ட தேடுதலின்போது 20க்கு அதிகமானோர் கைதுசெய்யப்பட்டனர்.

விசாரணையின் பின்னர் இந்த ஐந்து பேரைத் தவிர ஏனையோர் அன்றே விடுவிக்கப்பட்டுவிட்டனர். (உ-ஏ-150)

### நெடுங்கேணியில் தேடுதல்

நெடுங்கேணி, ஏப்ரல் 8

கடந்த புதன்கிழமை நெடுங்கேணிக்கு ஹெலிகொப்டரில் வந்து இறங்கிய 50க்கு மேற்பட்ட இராணுவத்தினர் நெடுங்கேணியைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

அப்போது பொ. சற்குணலிங்கம் (ஒரு குழந்தைக்கு தந்தை) என்பவரைக் கைதுசெய்து வவுனியா இராணுவ முகாமிற்கு கொண்டு சென்றனர். (இ-108)

### காணாமல்போன மகன் குறித்து பெற்றோர் புகார்

மட்டக்களப்பு, ஏப்ரல் 8

ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்ட தமது மகன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக பெற்றோர் பிரஜைகள் குழுவிடம் புகார் செய்துள்ளனர்.

செங்கலடி கொம்மாதுறை வாசியான மா. சத்தியானந்தன் 20வயது என்பவரே கொல்லப்பட்ட இளைஞராவார்.

படையினர் வீட்டு விருந்து ரி. வி. டெக் போன்ற பொருட்களையும் எடுத்துச்சென்றுள்ளனர் என்று புகாரில் தெரி[illegible]

## சமய சந்நிதிகளில்

### மருதடி விநாயகர் ஆலயத்தில் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 8

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் பதினொராவது திருவிழா இன்று புதன்கிழமை குருந்தமர திருக் விழாவாக காலையிலும் பிற்பகலிலும் நடைபெறும்.

விசேட நாதஸ்வரக் கச்சேரியும் இடம்பெறும்.

முன்னாள் அதிபர் திரு கயிலாயநாதன் 'சைவ வாழ்வு' என்னும் பொருள் பற்றி மாலை 7 மணியளவில் உரை நிகழ்த்துவார். (இ-எ)

### கிளிநொச்சியில் வருடாந்த உற்சவம்

கிளிநொச்சி ஏப். 8

கிளிநொச்சி உருத்திரபுரம் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் வருடாந்த உற்சவம் கடந்த 5 ஆம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 நாள் திருவிழாக்களும் நடைபெறும்.

14 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 15 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ-76)



## பொய்யாமொழி

குறள்:

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்.

பொருள்:

வரப்போவதை முன்னே அறிந்து காத்துக் கொள்ளவல்ல அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வர்ணப் புகைப்படம் பிரதி ஒன்று ரூ. 5/- மட்டுமே!
★ ProcessingFree(நெகடிவ்செய்வது இலவசம்)
★ வர்ண புகைப்படச் சுருள்கள் விற்பனைக்கு
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628



# உதயன்

08 04 1987 புதன்கிழமை



அன்புடன் அழைக்கின்றது!
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதிகளை
★ கம்பியூட்டர் முறையில்
★ குறைந்த செலவில்
★ சிறந்த சேவையில்
பெற்றுக்கொள்ளலாம்.


## வித்தாரம்

மூரளியசர்! என்ன காலையிலேயே புத்தகக் கடையோடை? என்ன நூல்நிலையப் பக்கத்தாலை கொண்டுவாறீரோ அல்லது புத்தகக்கடைப் பக்கத்தாலை வாறீரோ?

உது தெரிந்த நல்லபழக்கம். வீட்டிலை சும்மா இருக்கிற நேரத்திலை நல்ல பயனுள்ள, அறிவு விருத்திக்கு உதவக்கூடிய புத்தகங்களைப் படிச்சால் பின்னுக்குப் பிரயோசனமாய் இருக்கும்.

அட நீ பழைய சஞ்சிகைகளை எங்கேயோ கண்டுபிடிச்சுத் தொடர் கதைகளைப் படிக்கிறியோ? அதுவும் நல்லதுதான்.

ஓ, அச்சி, விகடன், குமுதம் எண்டு எல்லாம் தான் வைச்சிருக்கிறாய்.

விகடன் அதிபர் ஆனந்தவிகடன் விவகாரம் கடந்த நாலைஞ்சு நாளாய் ஒரே அமளியாய் இருக்கு.

பத்திரிகை ஜனநாயகத்தின்ரை காவல் நாய் எண்டு சொல்லுறது உண்டு. ஒரு நாட்டின் அரசாங்கத்துக்கு அடுத்தும் செல்வாக்கு மிக்கவை பத்திரிகைகள். சிலவேளை அரசாங்கத்துக்கு அதிகமான செல்வாக்குடன் பத்திரிகைகள் அரசாங்கங்களையே ஆட்டம் காணச் செய்கிறதும் உண்டு.

அதாலை அரசியல்வாதிகள் எப்போதும் பத்திரிகைகளைப்பற்றிக் கவனமாய் இருப்பினம். அரசியல்வாதியள் மட்டும் என்ன அதிகாரிகள், சமூகசேவை செய்யவெண்டு வாறவை எண்டு அநேகமாய் எல்லாத் தரப்பினரும் தங்களுக்குச் சாதகமாய் எழுதினால் பேப்பர்காரரைப் பாராட்டுவினம். கொஞ்சம் குறை குற்றத்தைச் சுட்டிக்காட்டி எழுதினவுடனை கோபப்படுவினம்.

எல்லா நாட்டுப் பேப்பர்காரருக்கும் உது பழக்கப்பட்டுப்போனதுதான். உண்மையான பேப்பர்காரன் உந்தப் போற்றலையும் தூற்றலையும் பொருட்படுத்தாமல் தன்ரை கடமையைச் செய்வான்.

ஆனந்த விகடன் பழம்பெரும் பத்திரிகை. மாபெரும் தமிழ் எழுத்தாளர் கல்கி, ஆனந்த விகடன் மூலம்தானே தமிழ் வளர்த்தவர். எஸ். எஸ். வாசன் அதன் ஆசிரியராக இருந்தவர். இப்போது அதன் பிரதம ஆசிரியராய் இருக்கும் பாலசுப்பிரமணியம் திரு. வாசனின் மகன்தான்.

விகடனில் ஒரு கேலிச் சித்திரத்தை (கார்ட்டூனைப்) பிரசுரித்ததற்காக தமிழ்நாடு சட்டப் பேரவை அதன் பிரதம ஆசிரியர் பாலசுப்பிரமணியனுக்கு 3 மாதக் கடுங்காவல் தண்டனை விதிச்சது.

ஆனால் அந்த பேர் பெற்ற பத்திரிகையின் செல்வாக்கால், மத்திய மந்திரி சிதம்பரம் தலையிட்டு தண்டனை நீக்கப்பட்டிருக்குது.

பாதிலை ஒரு 'பொடி' விஷயம். கார்ட்டூன் விஷயம்.

மக்கள் பிரதிநிதியளுக்கு எண்டு சில சிறப்பு உரிமையள் சபைகளுக்குள் கனகம் உண்டாக்கு விதத்திலை ஏதாவது எழுதினால் "சபைக் குற்றம்" வைச்சு விசாரிச்சுத் தண்டனை வழங்கிறவழக்கம் உண்டு. தமிழ் நாட்டு சட்டசபையிலை விசாரணை இல்லாமலேயே தண்டனை வழங்கிச்சினம்.

தண்டனை வழங்கிற அதிகாரம் நீதிமன்றங்களுக்குத் தானே உண்டு. மக்கள் பிரதிநிதிகள் சபை தண்டனை விதிக்கலாமோ எண்டு ஒருவர் சந்தேகம் எழுப்பினார்.

மக்கள் பிரதிநிதிகள் எண்ட மாட்சிமையைப் பாவிச்சு நாடாளுமன்ற நிகழ்ச்சியள், பிரதிநிதியளுக்குக் களங்கம் விளைவிச்சால் தண்டனை கொடுக்கும் அதிகாரம் எம்.பி. மாருக்கு உண்டு. அந்த வேலையளிலை மட்டும் அவை நீதிமன்றத்தைவிட "சுப்றீம்" ஆகுவினம்!

விகடன் கார்ட்டூன் வெளிக்கொண்டு வந்த கருத்து உண்மையானது. தமிழ்நாட்டிலை எண்டு மட்டுமில்லை அனேகமான மூன்றாம் உலக நாடுகளிலை அரசியல்வாதியள் கொமிஷன் எண்டும், ரெண்டர், அது இது எண்டும் ஏதோ ஒரு வகையிலை கொள்ளை அடிக்கிறது வழக்கமாய்ப் போச்சு.

எம். பி, மந்திரிப் பதவியள் நெடுகக் கிடையாது. அதாலை சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கொஞ்சம் உழைச்சு வைச்சால் அடுத்தமுறை தேர்தலாலும் இருந்த இரையிலை சாப்பிடலாம் எண்டு கணக்குப் போடுற அரசியல்வாதியள்தான் அதிகம். கஞ்சியிக்கை பயறுபோட்ட மாதிரி ஒண்டு இரண்டு நேர்மையான பேர்வழியளும் இல்லாமல் இல்லை.

விகடன் விஷயம் மொத்தத்திலை உள்ளதைச் சொன்னால் உடம்பு குமுறுகிற விஷயம் தான்! பொதுச்சேவை எண்டு வந்தவை விடுகிற பிழையையும் அக்கிரமம் செய்கிற தவறையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரவும் தண்டிக்கவும் பத்திரிகையளுக்கு அசையாத தத்துவம் உண்டு அதுகும் ஒரு ஜனநாயக உரிமை.

அரசியல்வாதியள் எண்டால் பேந்து அவை என்ன கடவுள்களே! மற்ற மனிதரைப்போலை ஆசையள் நிறைஞ்ச மனிதர் தானே.

உப்பிடிப் பார்க்கையிக்கை இனி எல்லா நாடுகளிலையும் முற்றும் துறந்த முனிவர்மாரை எம். பி மார் ஆக்கினால் என்ன எண்டு எனக்கொரு யோசினை ஓடுது......!

தொண்டேடி

---

பயங்கரவாதத்தை ஒழிப்பதாகக் கூறி

# சாதாரண மக்களையே அரசு கொன்றொழிக்கிறது

## ஜனாதிபதிக்கு வர்த்தகர்கள் மகஜர்

யாழ்ப்பாணம், ஏப். 8

பயங்கரவாதத்தை ஒழிப்பதாகக் கூறும் ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்பு அமைச்சும் இராணுவமும் சாதாரண மக்களையே அன்றாடம் கொன்றொழிக்கின்றன.

யாழ். வர்த்தகர் சங்கத்திலும் மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் நடவடிக்கையை அடுத்து யாழ் வர்த்தகர் சங்கத்தின் தலைவர் திரு. ஆ. க. நடராசா யாழ். செயலக உதவி அரசாங்க அதிபரிடம் கையளித்த மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

செயலகத்தில் மகஜரைப் பெற்றுக்கொண்ட உதவி அரசாங்க அதிபர் மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்புவதாகவும் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்காக தம்மால் இயன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எந்த ஓர் இனத்தையும் அல்லது ஒரு பகுதியினரையும் அடக்கி ஆட்சி நடத்த முடியாது என்பது அரசியல் வாழ்க்கையில் நன்கு புலனாகும்.

இந்தச் செயலானது பௌத்த தர்மத்தைப் போற்றும் தங்கள் தர்மிஷ்ட அரசுக்குப் பெரும் அபகீர்த்தியையே ஏற்படுத்தி வருகின்றது.

யாழ் மாவட்டத்தில் மக்கள் குடியிருப்புகள் மீது விமானக் குண்டு வீச்சு நடைபெறுவது இன்று சர்வசாதாரணமாகிவிட்டது.

குண்டு வீச்சால் சாதாரண பொதுமக்கள் அன்றாடம் கொல்லப்படுவதுடன் பெருந்தொகையான சொத்துக்களும் வீடுகளும் அழிக்கப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் உள்ள எல்லா இராணுவ முகாம்களில் இருந்தும் தினமும் ஷெல் தாக்குதல்கள் நடைபெறுகின்றன.

இதனால் பெருந்தொகையான மக்கள் கொல்லப்படுவதுடன் பலர் படுகாயமடைந்து வருகின்றனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் தத்தம் வீடுகளை விட்டு அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

கோட்டை முகாமில் இருந்து ஏவப்படும் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களினால் இதுவரை பல நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக யாழ் வைத்தியசாலை மீதும், நோயாளர் அம்புலன்ஸ் மீதும் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன.

இதன் காரணமாக 14 நோயாளர்கள் துடிதுடித்து மாண்டனர்.

ஆகவே இராணுவ நடவடிக்கையை உடன் நிறுத்தி உடனடியாக சமாதானத் தீர்வைக் காண வழி செய்யுங்கள்.

இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ-10)

## 8 யுத்தக் கைதிகள்; விடுவிக்கக் கோரி ஊர்வலம் நடத்தும் முயற்சிக்குத் தடை

கொழும்பு, ஏப் 8

தமிழீழ விடுதலைப் புலிகளினால் யாழ்ப்பாணத்தில் சிறைவைக்கப்பட்டுள்ள எட்டு ஆயுதப் படையினரையும் விடுவிக்கக் கோரி காலி மாணவர் நடத்தவிருந்த ஊர்வலம் கடந்த திங்கள் பொலீஸாரினால் தடை செய்யப்பட்டது.

காலி பொலிடெக்னிக் இன்ஸ்டிடியூட் மாணவர் இந்த ஊர்வலத்தை நடத்த ஒழுங்கு செய்திருந்தனர்.

ஊர்வலம் முடிவில் படையினரை விடுவிக்கக் கோரும் மகஜர்களைக் கையளிக்க இருந்தனர்.

ஜனாதிபதிக்கான மகஜரை காலி மாவட்ட அமைச்சரிடமும் ஆயுதப் படைத் தலைவருக்கான மகஜரை பொலீஸ் அதிபரிடமும் கையளிக்க மாணவர்கள் திட்டமிட்டு இருந்தனர்.

மேலிடத்தின் உத்தரவின் மீது ஊர்வலம் தடை செய்யப்பட்டது என்று பொலீஸார் தெரிவித்தனர். (உ-எ)

## 78 முதல் 86 வரை வடக்கு, கிழக்கில் எத்தனை பேர் உயிரிழந்தனர்?

### நாடாளுமன்றத்தில் அனில் கேள்வி

கொழும்பு ஏப் 8

1978 ஜனவரி தொடக்கம் 1986 அக்டோபர் வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எவ்வளவு பேர் கொல்லப்பட்டனர்?

இந்தக் கேள்வியை நாடாளுமன்றத்தில் எழுப்புவதற்கு மாத்தறை எம், பி திரு. அனில் முனசிங்க முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு அனில் முனசிங்க முன்னறிவித்தல் கொடுத்த கேள்வி வருமாறு:

1. 1-1-1978 முதல் 31.10.1986 வரை வடக்கு மாகாணங்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை என்ன?

2 சேதமடைந்த உடைமைகளின் பெறுமதி என்ன?

3 எத்தனைபேர் அகதிகளாகி இருக்கின்றனர்? (உ-ஐ-எ)

### 10 நாள்...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

வலியுறுத்த வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணவும் இந்தியா விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்திய இராஜதந்திரத்துக்கு நெருக்கடியான காலகட்டம் இது.

தெளிவான, திட்டவட்டமான தீர்மானம் எடுக்கப்படவேண்டிய காலம் இது. இந்தியா தனது மத்தியஸ்த பங்கைக் கைவிடக்கூடாது.

வட பகுதி நிலைமையைக் கட்டுப்படுத்த இராணுவ பலத்தைப் பெருக்குவதும் மோதல்களை நடத்துவதும் பாதுகாப்புச் செலவினத்தைத் தான் அதிகரித்துள்ளது.

ஐக்கிய இலங்கையினுள் இலங்கைத் தமிழருக்கு சுயாட்சி வழங்கப்படவேண்டும் என்பதை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரித்து வருகிறது.

இப்படி அமைச்சர் தொண்டமான் தனது பேச்சில் சொன்னார். (உ-எ)

### அரசமைப்புக்கு 11ஆவது திருத்தம்

கொழும்பு, ஏப்ரல் 8

இலங்கை அரசமைப்பைத் திருத்தும் 11ஆவது திருத்தம் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

128 உறுப்பினர்கள் இதற்கு ஆதரவாக வாக்களித்தனர். எதிர்க்கட்சி எம் பிக்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் மேல் நீதிமன்றம் சிவில்வழக்குகளையும் விசாரிக்க இச்சட்ட திருத்தம் வகை செய்கிறது. (உ-எ)

### 34 மாதங்க...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

பதில் கிடைக்காததைத் தொடர்ந்து 34 மாதங்களுக்கு மேலாகச் சிறை ... அரசியல் கைதிகள் ... முதல் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர். (உ-எ)

ஆலங்கேணியில்

## ஆண்களைக் கைது செய்தும் பெண்களைத் துன்புறுத்தியும் சிப்பாய்கள் அட்டகாசம்

திருகோணமலை ஏப். 8

ஆலங்கேணிக் கிராமத்துக்கு ஆயுதப்படையினர் அடிக்கடி சென்று ஆண்களைக் கைது செய்தும் பெண்களைத் துன்புறுத்தியும் வருகின்றனர் என்று திருமலை இராணுவ இணைப்பு அதிகாரி, அரச அதிபர் ஆகியோரிடம் முறையிடப்பட்டுள்ளது.

திருகோணமலைப் பிரஜைகள் குழுவினரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.

ஆலங்கேணிக் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 50 தமிழ்ப் பெண்கள் அண்மையில் திருகோணமலைப் பிரஜைகள் குழுவிடம் நேரடியாக முறையிட்டிருந்தனர்:

திடீர், திடீர் என்று இராணுவத்தினர் வந்து வீடுகளுக்குள் நுழைகின்றனர். வீட்டில் உள்ள பொருள்களை அடித்து நொருக்குகின்றனர்; வெளியில் தூக்கி எறிகின்றனர். ஆண்களைக் கைது செய்து கொண்டு செல்கின்றனர்.

கடந்த மாதத்தில் ஐந்து தடவைகள் இராணுவத்தினர் கிராமத்துக்குள் புகுந்த இப்படியான செயல்களில் ஈடுபட்டனராம்.

கைது செய்யப்பட்டவர்கள், பற்றிய விவரங்களைக் கூடப் பெற முடியாதுள்ளது.

இப்படி பெண்கள் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே, பிரஜைகள் குழு, இராணுவ இணைப்பதிகாரி, அரச அதிபர் ஆகியோரிடம் முறையிட்டது. (இ-எ-150)

### எங்களை...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

ளுக்கு முன்னர் கொழும்பில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியுடன் இது பற்றிக் கேட்டேன்.

'வெயிட் அண்ட் ஸீ' (பொறுத்திருந்து பார்ப்போம்) என்று அவர் பதில் கூறினார்' - இப்படி அப் பத்திரிகையாளர் பதில் சொன்னார்.

தங்களது விடுவிப்புக்கு ... அமைச்சர் ... யுத்தக் கைதிகள் அப்பத்திரிகையாளரிடம் கவலை வெளியிட்டனர். (உ-10)

### அச்சுவேலியில் மரக்கறி சந்தை இடம் மாறும்

அச்சுவேலி, ஏப்ரல் 8

அச்சுவேலி பொதுச் சந்தை நவீன சந்தையாக மாற்றி அமைக்கப்படவிருப்பதை அடுத்து தற்போதைய மரக்கறிச் சந்தை புதிய இடத்துக்கு மாற்றப்படவுள்ளது.

புதிய மரக்கறிச்சந்தை 80 ஆயிரம் ரூபா செலவில் மீன் சந்தைக்கு அருகில் அமைக்கப்பட்டு வருகிறது.

பழைய மரக்கறிச் சந்தை இடிக்கப்பட்டு அந்த இடத்தில் நவீன சந்தைக்கான கட்டடம் அமைக்கப்பட உள்ளது. (இ-11)

---

ஷார்ஜா கிரிக்கெட்!

## பாகிஸ்தான் மண்கவ்வியது! இங்கிலாந்து அபார வெற்றி!!

ஷார்ஜா, ஏப்ரல் 8

நான்கு நாடுகளுக்கிடையில் ஷார்ஜாவில் நடைபெறும் ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் பலம்வாய்ந்த அணி எனக் கருதப்பட்ட பாகிஸ்தான் அணி, இங்கிலாந்து அணியிடம் மண் கவ்வியது.

விளையாட்டு ரசிகர்கள் எதிர்பாராத வகையில் இங்கிலாந்து அணி நேற்றுப் பாகிஸ்தான் அணியை 5 விக்கெட்டுகளினால் தோற்கடித்தது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 218 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்துத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 2 ஓவர்கள் மிச்சம் இருக்கையில் 5 விக்கெட் இழப்புக்கு 220 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றிபெற்றது.

இதுவரை நடந்த ஆட்டங்களின்படி அணிகள் பெற்ற புள்ளி விவரம்:-

| அணி | பங்குபற்றிய ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| இந்தியா | 2 | 2 | — | 4 |
| பாகிஸ்தான் | 2 | 1 | 1 | 2 |
| இங்கிலாந்து | 2 | 1 | 1 | 2 |
| அவுஸ்திரேலியா | 2 | — | 2 | 0 |

## ஜனாதிபதியின் 'பொவன்புர' பேச்சு வெறும் அரசியல் கோமாளித்தனம்

### 'தினரஸ' ஆசிரிய தலையங்கம்

கொழும்பு, ஏப் 8

அனுராதபுரம் 'பொவன்புர' நிகழ்ச்சியில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நிகழ்த்திய பேச்சு, வெறும் அரசியல் கோமாளித்தனம்.

ஜனாதிபதியிடம் இருந்து மக்கள் அரசியல் கோமாளித்தனத்தை எதிர்பார்க்கவில்லை; அறிவான பேச்சையே எதிர்பார்க்கின்றார்கள்.

இப்படி சுதந்திரக் கட்சியின் சிங்கள நாளிதழான 'தினரஸ' தனது ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

மார்ச் 31 இதழில் "பிணம்கூட சிரிக்கும்!" - என்ற தலைப்பில் இந்த ஆசிரியர் தலையங்கம் வெளியானது.

ஆசிரியர் தலையங்கம் வருமாறு:

அனுராதபுரத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தன நிகழ்த்திய 'போலி வீரத்தனமான' பேச்சு பிணத்தைக்கூட சிரிக்க வைக்கும்.

என்ன முட்டாள்தனமாக அவர் அங்கு பேசினார்!

அழைக்கப்பட்டால் யாழ்ப்பாணம் போய்ப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பாராம்.

இதை அரசின் கைப்பாவைகளான பத்திரிகைகள் பெரிதுபடுத்தின.

அனுராதபுரத்தில் நடந்த இளைஞர் முகாமில் சுமார் 50 தமிழ் பேசும் இளைஞர் மட்டுமே இருந்தனர் என்பதை அப்பத்திரிகைகள் மறந்துவிட்டன.

எல்லா பாதுகாப்புகளுடனும் திரு. ஜெயவர்த்தன வடபகுதி சென்று திரும்பினால் ஏதாவது பிரச்சினையைத் தீர்த்துவிட்டேன் என்று அவரால் பின்னர் சொல்ல முடியுமா?

அவரின் சின்னத்தனமான பேச்சுக்களிலும் பார்க்க இந்தக் கேள்விகள் அடிப்படையானவை.

அப்படி யாழ் சென்று பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவது இவரு என்றால் ஏன் நூற்றுக்கணக்கான இளம் சிங்களச் சிப்பாய்களைச் சாக அனுமதித்துக் கொண்டு இருக்கின்றார்?

நிச்சயமாக நாடு ஜனாதிபதியிடம் இருந்து அதிகமாக எதிர்பார்க்கிறது; அரசியல் கோமாளி போன்ற நடத்தையை அல்ல!

-இப்படி 'தினரஸ' ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது. (உ-ஐ-எ)

### நகரில்:.

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

வின் ஷெல் தாக்குதலுக்கு இலக்காவதைக் கண்டித்தும் நேற்றைய கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டது.

தூர இடங்களுக்கான பஸ்கள் மட்டும் நேற்று யாழ் நகர பஸ் நிலையத்தில் இருந்து சேவையாற்றின. உள்ளூர் சேவைகள் எதுவும் நடைபெறவில்லை. நகரில் நடமாட்டங்கள் அதிகம் இருக்கவில்லை வீதிகள் வெறிச்சோடிக்கிடந்தன.

நகரில் உள்ள கடைகள் மீது கறுப்புக் கொடிகளும் பறக்க விடப்பட்டிருந்தன

அரச அலுவலகங்கள் பலவும் நேற்று ஊழியர்கள் வரவின்மை காரணமாக இயங்கவில்லை. (உ-10)

### ஆசிரியர்களுக்கு வட்டியில்லாக் கடன்

முள்ளியவளை, ஏப்ரல் 8

முல்லைத்தீவுக் கல்வி மாவட்டத்தில் கடமை பார்க்கும் ஆசிரியர்கள், ஊழியர்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 3 மாத அடிப்படைச் சம்பளம் வட்டி இல்லாக் கடனாக வழங்கப்படும். இதற்கான விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மூன்று ஊழியர்களே முல்லைத்தீவுக் கல்வித் திணைக்களத்தில் வங்கிக் கடன், விழா முற்பணம் ஆகிய கொடுப்பனவுகளைச் செய்துகொண்டிருப்பதால், ஏப்ரல் மாதத்துக்கிடையில் வட்டியில்லாக் கடனை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் உதயனிடம் தெரிவித்தார். (இ-93)

புதுச்சேரி சட்டசபை

## எதிர்க்கட்சி உறுப்பினர் ஐவருக்குத் தடை!

பாண்டிச்சேரி, ஏப். 8

புதுச்சேரி சட்டசபையில் அங்கம் வகிக்கும் ஐந்து தி. மு. க. எம். எல்ஏக்களும் ஒரு ஜனதா எம் எல்.ஏயும், கூட்டத் தொடர் முடியும்வரை பங்குபற்ற முடியாது என்று தடைவிதிக்கப்பட்டுள்ளது.

சட்டசபைச் சபாநாயகர் காமிச்செட்டி இந்த உத்தரவை நேற்று விடுத்தார்.

குழப்பம் செய்தனர் என்ற காரணம் காட்டி இதுசம்பந்தமான பிரேரணை ஒன்றை முதலமைச்சர் பாரூக் கொண்டுவந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தி. மு. க.வுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று கோரி இந்த எம். எல் ஏக்கள் நேற்று சபையில் பலத்த ரகளை செய்தனர். (உ-எ)

### ஆஸ்பத்திரி அபிவிருத்திக்கு குழு நியமனம்

அச்சுவேலி ஏப்ரல் 8

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் குறைகளை நீக்கி ஆஸ்பத்திரியை அபிவிருத்தி செய்வதற்கு முன்னாள் சுகாதாரப் பரிசோதகர் திரு எஸ். யோசேப் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.


## முறைசாராக் கல்வி

யா / ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
சுன்னாகம்.

தொழில் நுட்பக்கல்வி:-

மோட்டார் எந்திரவியல்

சேரவிரும்பும், பாடசாலையிலிருந்து விலகிய மாணவர்கள் 17 - 04 - 87 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

அதிபர்
(2828) ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி இரண்டாம் ஒழுங்கை 15, ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 08 - 04 - 1987 தொலைபேசி இல. 24805, 22078

Printed and Published by Uthayan Publications (Private) Ltd.
15, Second Lane, Power House Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office. Under Number ... Telephone 24805 22073



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org